ஷோடசக்கல்.

A. M. D. G.

வேத தர்க்கம்.

(ஆறும் பாகம்.)

கத்தோலிக்கு சத்தியாபிமான சபை,
ன்மேன்ட், திருச்சினுப்பள்ளி.

1928.

A. M. D. G.

வேத தர்க்கம்.

(ஆறும் பாகம்).

திருச்சபைக்குத் தலைவர் யார்?

புரோட்டேஸ்டாண்டு: திருச்சபைக்குத் தலைவர் கடவுளே, வேறெவரும் அவசியமில்லை.

மாறுத்தரம்: அவ்வண்ணமே குடும்பங்களுக்குத் தலைவர் கடவுளே, ஆகிலும் குடும்பத்தை நடத்த ஒரு தகப்பன் வேண்டாமா? இராச்சியங்களுக்குத் தலைவர் கடவுளே, ஆகிலும் இராச்சியங்களை ஆண்டு நடத்த ஒரு அரசனாவது பிரஜாதிபதியாவது வேண்டாமா? இடையனில்லாத மந்தையும் தளகர்த்தனில்லாத சேனையும், தலையில்லாத உடலும் என்ன கெதியாகும்? சேசுநாதரே திருச்சபைக்குத் தலைவரானபோதிலும், அவருக்குப் பதிலாக, கண்ணால் காணக்கூடிய பிரத்தியக்ஷ தலைவர் ஒருவர் அதை நடத்திவருவது அவசியமல்லவா?

புரோட்.: சேசுநாதர் தமக்குப் பதிலாக திருச்சபைக்குத் தலைவர் ஒருவரை நியமித்தாரென்று சுவிசேஷத்திலெங்கே சொல்லப்பட்டிருக்கிறது?

மாறுத்தரம்: முதன்முதல் சீமோனை அவரது சகோதரர் அர்ச். பெலவேந்திரர் (St. Andrew) சேசுநாதரிடத்தில் கூட்டிவந்தபோது, சேசுநாதர் அவரை நோக்கி: நீ யோனாவின் மகனாகிய சீமோனல்லோ. இனி நீ கேபாஸ் என்று அழைக்கப்படுவாய் என்றார். (கெபாஸ் என்பதற்கு இராய் (கல்) என்றர்த்தம்). அரு. 1—42. கட

வுள் **அபிராம்** என்னும் பிதாப்பிதாவைத் தமது பிரஜைகளின் தகப்பனுக்குத் தெரிந்துகொண்டபோது, அவருடைய நாமத்தை **அபிரகாம்** என்று பழைய ஏற்பாட்டின் காலத்தில் மாற்றினது போல, சீமோனென்பவர் இனித் தமது திருச்சபையைக் கட்டும் அஸ்திவாரக் கல்லாக வேண்டியதினுல், சேசுநாதர் அவர் பெயரை "கெபாஸ்", (அல்லது கல்) என்று மாற்றினார்.

பிறகு பிலிப்புவின் சேசாரேயா என்னும் பட்டணத்தின் அருகில், சீமோன் இராயப்பர் "நீர் கிறீஸ்துவானவர், சுயஞ்சீவிய சர்வேசுரனுடைய குமாரன்" என்று விசுவாச உச்சாரணஞ் செய்தபோது, கிறீஸ்துநாதர், "நீ (Thou) **இராயாய்** இருக்கிறாய். **இந்த இராயின்மேல்** என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது" என்றார் (மத். 16—18). "நீ இராயாய் இருக்கிறாய்" என்று உரைக்கும்போது சீமோனையும், "இந்த இராயின்மேல்" என்று சொல்லும்போது கிறீஸ்துநாதர் தம்மையும் சுட்டிக்காட்டுவதுபோல் சிலர் அர்த்தம் சொல்வதுண்டு. இது சேசுநாதர் "கெபாஸ்" (கல்) என்று முன்னதாகவே பெயர் கொடுத்ததற்கும், பிறகு "இராய்," (கல்), கல்லுக்குரிய பலமுள்ள அஸ்திவாரம் என்று அழுத்திச்சொல்ல எண்ணினதற்கும் முழுதும் விரோதமும் பொருந்தாததுமான விநோத அர்த்தமாகும். அர்ச். இராயப்பரின்மேல் சேசுநாதரின் திருச்சபை கட்டப்பட்டிருப்பதால், அவரை அஸ்திவாரமாகக் கொண்டிராத சபைகள் சேசுநாதரின் திருச்சபையாகா.

"**மோட்சத்தின் திறவுகோல்களையும்** உனக்குக் கொடுப்பேன். பூலோகத்தில் நீ எதைக் கட்டுவாயோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீ பூலோகத்தில் எதைக் கட்டவிழ்ப்பாயோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத். 16-19). ஒரு பட்டணத்தின் திறவுகோல்களைக் கொண்டுபோய் கொடுப்பதென்றால், அந்தப் பட்டணத்தின்பேரில் சர்வ அதிகாரமும் கொடுப்பதற்கு அடையாளமாகும். இது பண்டைய

காலந்தொட்டு எவ்வித ஜாதிஜனங்களும் கண்டுபிடித்து வரும் விஷயம். ஆகவே, தமது திருச்சபையாகிற பூலோக மோட்சத்தில் சர்வாதிகாரமும் அர்ச். இராயப்பருக்கு அளிக்கப்படுமென்று இவ்வார்த்தைகளால் கிறீஸ்துநாதர் அறிவிக்கின்றார். மோட்ச திறவுகோல்களைக் கொடுப்பதாகச் சொன்னது அர்ச். இராயப்பர் ஒருவருக்கேயன்றி வேறு எந்த அப்போஸ்தலருக்குமல்ல என்பது கவனிக்கத் தக்கது.

புரோட். : சேசுநாதர் "திருச்சபையைக் கட்டுவேன்," "திறவுகோல்களைக் கொடுப்பேன்" என்று வருங்காலத்தில்தானே சொல்லியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தை எப்போது நிறைவேற்றினார்?

மாறுத்தரம் : உயிர்த்தபிறகு, "சேசுநாதர் சீமோன் இராயப்பரைப் பார்த்து: யோவானின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் நீ என்னை அதிகமாய் நேசிக்கிறாயோ என, அவர்: ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேனென்று உமக்குத் தெரியுமே என்று அவருக்குச் சொன்னார். அப்பொழுது அவர் அவரை நோக்கி: **என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக** என்றார். மறுபடியும் அவர்: யோவானின் குமாரனாகிய சீமோனே, என்னை நேசிக்கிறாயோ, என்று அவருக்குச் சொல்ல, அவர்: ஆம் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேனென்று உமக்குத் தெரியுமே என்றார். அப்பொழுது அவர் அவரை நோக்கி: **என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக** என்றார். அவர் மூன்றும் முறையும் அவரை நோக்கி: யோவானின் குமாரனாகிய சீமோனே, என்னை நேசிக்கிறாயோ என்றார். என்னை நேசிக்கிறாயோ என்று அவர் மூன்றும் தரம் தன்னைக் கேட்டபடியினாலே, இராயப்பர் விசனப்பட்டு: ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே. நான் உம்மை நேசிக்கிறேனென்று நீர் அறிவீரே என்றார். அப்பொழுது சேசுநாதர்: **என் ஆடுகளை மேய்ப்பாயாக**, என்று அவருக்குத் திருவுளம்பற்றினார். (அரு. 21.—15, 16, 17).

"நானே நல்ல ஆயன்" (அரு. 10-11) என்ற கிறீஸ்துநாதர் தமது ஆட்டுக்குட்டிகளையும் ஆடுகளையும், அதாவது முழு மந்தையையுமே அர்ச். இராயப்பர் மேய்க்கும்படி திட்டம் பண்ணுகிறார். மற்ற மேய்ப்பர்களுக்கு மந்தையின் ஒவ்வொரு பாகம் மாத்திரம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது; அர்ச். இராயப்பர் ஒருவருக்குமாத்திரம் யாதொரு எல்லை, குறிப்பு இல்லாமல் மந்தைமுழுவதும் கொடுக்கப்படுகிறது. நீ கிறீஸ்துவினுடைய மந்தையில் சேர்ந்திருக்கிறாயா? அப்படியானால் அவர் நியமித்த மேய்ப்பரின் குரலுக்குச் செவிசாய்க்கிறாயா?

புரோட்.: பேதுரு அப்போஸ்தலர் திருச்சபைக்குத் தலைவரென்று கிறீஸ்துநாதரால் நியமிக்கப்பட்டிருந்தால், சேசுநாதர் மோட்சத்துக்கு ஆரோகணமானபிறகு, அது தெளிவாய்த் துலங்கியிருக்கவேண்டுமே; அப்படி ஒன்றும் காணோமே.

மாறுத்தரம்: சுவிசேஷங்களிலும் அப்போஸ்தலர் நடபடியிலும் அப்போஸ்தலர்களின் பெயரை எழுதும்போது, அர்ச். இராயப்பர் பெயர் முதலிலும் சதிதுரோகியான யூதாசின் பெயர் கடைசியிலும் வருகிறதைக் கவனிக்க (மத். 10-2; மார்க்கு 3-16; லூக். 6-14; அப். நட. 1-14). "அப்பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடைய நாமங்களாவன: **முந்தினவர்** இராயப்பர் என்னப்படுகிற சீமோன், பிறகு, அவருடைய சகோதரராகிய பெலவேந்திரரும்..." (மத். 10-2) என்று அர்ச். மத்தேயு தெளிவாய் எழுதுகிறார். அர்ச். இராயப்பர் வயதிலாகிலும், சீஷராகச் சேர்ந்ததிலாகிலும், அவருடைய அண்ணனாகிய அர்ச். பெலவேந்திரருக்கு முந்தினவரல்ல. ஆகவே, அவர் பெயரை முதலில் எழுதுவதற்கு அவர் தலைமை அதிகாரமே காரணம். **யூதாசுக்குப்பதிலாய்** மற்றொரு சீஷரைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று எடுத்துப்பேசி, அதை நடத்திமுடித்தவர் அர்ச். இராயப்பரே (அப். நட. 1-15). அவரே ஜெருசலேமுக்கு வந்திருந்த யூதர்களுக்குப் பிரசங்கித்து **முதன் முதல்** மூவாயிரம் யூதர்களை **மனந்திருப்பினார்** (அப். நட.

2-14). அவர்தான் பிறவிச்சப்பாணிக்கு அற்புதமாய்க் குணமளித்து **முதற் புதுமை செய்தவர்** (அப். நட. 3-ம் அதி.). கொர்னெலியுசும் அவன் சிநேகிதரும் **புறஜாதியா ராயிருந்தபோதிலும்,** அவர்களுக்கு **முதன்முதல்** ஞானஸ்நானங் கொடுத்தவர் அவரே (அப். நட. 10-ம் அதி.). ஜெருசலேமில் நடந்த முதல் கூட்டத்தில் துவக்கத் தில் "மிகுந்த வாக்குவாதம்" உண்டாயிருந்தபோதிலும், அர்ச். இராயப்பர் எழுந்து பேசினவுடன் "**யாவரும் மௌனமாயிருந்தார்கள்**" (அப். நட. 15-12.). அவர் சொன்னதையே அர்ச். யாகப்பரும் (St. James) பின்னுல் ஆமோதித்துப் பேசினுர். "இராயப்பர் போய் **எல்லோரையும் விசாரித்து வந்தார்**" (அப். நட. 9-32) என்று அப்போஸ்தலர் நடபடியில் எழுதியிருக்கிறது. **அனனியாவும் சாப்பிராளும்** நிலத்தை விற்று ஒரு பங்கை வஞ்சகமாய் வைத்துக்கொண்டுபோய் சொன்னபோது, அவரே அவர்களைக் **கண்டித்துத் தண் டிக்கிறர்** (அப். நட. 5-ம் அதி.).

அர்ச். யாகப்பர் சேசுநாதருக்கு உறவினரும் அர்ச். அருளப்பருக்குச் சகோதரனும், ஆண்டவரால் விசேஷ விதமாய் நேசிக்கப்பட்ட மூன்று அப்போஸ்தலர்களில் ஒருவராயுமிருந்தபோதிலும், அவரை எரோதன் கொல்வதற்குமுன் சிறையிலடைத்தபோது திருச்சபையிலுள்ளவர்கள் அவரை மீட்கும்படி விசேஷ கவலைகொண்டதாகத் தெரியவில்லை. ஆனுல் அதே சமயத்தில் அர்ச். இராயப்பரைச் சிறையிலடைத்தபோது, "அவருக்காக **இடைவிடாமல்** சர்வேசுரனை நோக்கி **ஜெபம் நடந்துவந்தது**" (அப். நட. 12-5). இந்த அப்போஸ்தலர்மட்டில் திருச்சபைக்கு ஏன் இந்த விசேஷ கவலை?

மேலே சொன்னவைகளை எல்லாம் வீண் விவாதமின்றி நேர்மையுடன் சீர்தூக்கிப் பார்ப்பீரானுல், அர்ச். இராயப்பரைத் **தமது** திருச்சபைக்குத் தலைவராக சேசுநாதர் சுவாமி நியமித்தாரென்பது தெளிவாய்த் துலங்கும்.

புரோட். : நீர் சொல்வது சரிதான். ஆனல் இதற்கு இன்னம் சில ஆக்ஷேபனைகளுண்டு. "அந்தக் கற்பாறையோ கிறீஸ்துநாதர்தான்" (1. கொரி. 10-4) என்றும், "போடப்பட்டிருக்கிற அஸ்திவாரமாகிய சேசுக்கிறீஸ்து நாதரையல்லாமல் வேறே எந்த அஸ்திவாரத்தையும் எவனும் போடவொண்ணுது" (1. கொரி. 3-11) என்றும் வேதத்தில் எழுதியிருப்பதால், கிறீஸ்துநாதரே பாறை, அவரையன்றி வேறொருவரும் அஸ்திவாரமாயிருக்கக் கூடாது.

மாறுத்தரம் : "கிறீஸ்துநாதர் திருச்சபைக்கு அஸ்திவாரமும் தலையுமல்ல, அர்ச். இராயப்பரே கிறீஸ்து நாதருடைய உதவி சம்பந்தமின்றி திருச்சபைக்கு அஸ்திவாரக்கல்லும் தலைவருமாயிருக்கிறர்" என்று கத்தோலிக்கர் போதிப்பதில்லை; அது தேவதூஷணமாகும். எவ்வண்ணம் தூர இங்கிலாந்து தேசத்திலிருக்கும் சக்கரவர்த்தி தமக்குப் பிரதிநிதியாக இந்தியாவில் ஒருவரை அனுப்பி அவரைக்கொண்டு நமது மத்தியிலிருந்து நம்மை ஆண்டு வருகிறரோ, அதுபோல் மோட்சத்துக்கு எழுந்தருளிப் போகுமுன், கிறீஸ்துநாதர் தமக்குப் பிரதிநிதியாக இவ்வுலகத்தில் திருச்சபைக்குத் தலைமையாயிருந்து அதை நடத்தும்படி அர்ச். இராயப்பரைத் தெரிந்துகொண்டு, தம்மோடும் தமது வல்லமையினுலும் அர்ச். இராயப்பரை திருச்சபையைக் கட்டும் அசையா அஸ்திவாரக் கற்பாறையாக்கினரென்பதே கருத்து. இதை ஏற்றுக்கொள்வதில் என்ன ஆக்ஷேபனை உண்டு?

புரோட். : "நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திவாரங்கள் இருந்தன; அவைகளில் செம்மறிப் புருவையானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பன்னிரண்டு நாமங்களும் இருந்தன" (காட்சி. 21—14). "அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் என்னப்பட்ட அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்" (எபே. 2—20). ஆகையால் எல்லா அப்போஸ்தலரும் சரிசமானமாய் அஸ்திவாரக் கற்களாயிருக்கிறர்கள்.

பேதுருவுக்கு மாத்திரம் முதன்மையான அதிகாரத்தைக் கொடுப்பானேன் ?

மாறுத்தரம் : சேசுநாதர்சுவாமி மற்றவர்களுக்குப் பெயரை மாற்றி, "கெபாஸ்" (கல்) என்று பெயர் வைக்க வில்லை ; மற்றவர்களுக்கு மோட்சத்தின் திறவுகோல்களை அளிப்பதாகச் சொல்லவில்லை ; மற்ற அப்போஸ்தலர்களை நோக்கி, "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக," "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று வசனிக்கவில்லை. மேலே எடுத்துக் காட்டியதுபோல ஆதித்திருச்சபையி லும் அர்ச். இராயப்பரைப்போல் அவர்கள் முதன்மையா யில்லை. ஆகவே, எல்லா அப்போஸ்தலர்களும் திருச் சபையில் சமானமான அதிகாரங் கொண்டிருந்தார்க ளென்று ஒரு வசனத்திலிருந்து தீர்மானிக்கலாகாது. எப் படி ஒரு இராச்சியத்தை ஆளும் அரசன் ஒருவன் இருந்த போதிலும், அவனுடைய மந்திராலோசனை சபைகள் முத லியவையும் சேர்ந்து இராச்சியத்துக்கு ஆதாரமும் அஸ்தி வாரமுமாயிருக்கிறதென்று சொல்லலாமோ, அப்படியே அர்ச். இராயப்பர் திருச்சபைக்குத் தலைவராயிருப்பினும், அவரோடு மற்ற அப்போஸ்தலர்களின் கூட்டமும் சேர்ந்து ஒருவாறு அஸ்திவாரமாயிருப்பதாகச் சொல்லத்தகும். அதுவே நீர் எடுத்துரைத்த வேதவாக்கியங்களின் கருத்து.

புரோட். : கிறீஸ்துநாதர் தமக்கு வரவேண்டிய பாடு களைக் குறித்துப் பேசினபோது, பேதுரு, "சுவாமி, இது உமக்கு வராதிருக்கக்கடவது" என்று சொன்னதற்கு, அவரை ஆண்டவர் கடிந்துபேசி, "நீ சர்வேசுரனுக் கடுத்தவைகளையல்ல, மனிதருக்கடுத்தவைகளையே சிந்திக் கிறாய் என்றார்" (மத். 16—23). இத்தன்மையானவர் திருச்சபைக்குத் தலைவர் என்று சொல்லலாமா ?

மாறுத்தரம் : இது மாத்திரமல்ல, பிற்பாடு சேசு நாதரை மும்முறை அறியேனென்றும் மறுதலித்து ஆணை யிட்டார். ஆகிலும், இவரிடத்தில்தான் மும்முறை என்னை நீ நேசிக்கிறாயா என ஆண்டவர் கேள்விகேட்டு

தமது மந்தையை இவரிடம் ஒப்புவிக்கிறார். மேலும் சர்வேசுரனுக் கடுத்தவைகளைச் சிந்திக்கிறதில்லை என்று கடிந்து கொண்டதாக எழுதியிருக்கும் அதே சுவிசேஷத்தில் அதே அதிகாரத்தில், "சீமோனே நீ பாக்கியவான். ஏனெனில் மாம்சமும் இரத்தமுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவானவர் தாமே இதை உமக்கு வெளிப்படுத்தினார்" என்று திருவுளம்பற்றுகிறார் (மத். 16—17). சீமோனுக்குள்ள சுபாவக் குறைகளை அறிந்து, "சீமோனே, சீமோனே, இதோ உங்களைக் கோதுமையைப்போல புடைக்கும்படி சாத்தான் கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் தளராதபடி, உனக்காக வேண்டிக்கொண்டேன். ஆகையால் நீ ஒருதரம் மனந்திரும்பினபின்பு, உன் சகோதரரை உறுதிப்படுத்து என்றார்" (லூக். 22—31, 32). ஆண்டவருடைய மன்றாட்டு ஒருபோதும் பலனில்லாமற் போகாதாகையால், அர்ச். இராயப்பரைக் கிறீஸ்துநாதர் தலைவராக நியமித்தபின்பு அந்த அந்தஸ்துக்கு வேண்டிய விசுவாச உறுதியையும் மற்ற வரங்களையும் அவருக்குக் கொடுத்தருளினார் என்பது நிச்சயம். அதற்கு முன் அவரிடமிருந்த குற்றங்குறைகளை ஆண்டவர் கண்டித்துப் பேசியதிலிருந்து அவரைத் திருச்சபைக்குத் தலைவராக நியமிக்கவில்லை என்று நியாயம் பேசுவது பொருந்தாது. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமல்லோ?

புரோட்.: பவுல் என்பவர் பேதுரு அப்போஸ்தலரைப்பற்றி, "நான் அவர் முகதாவில் எதிர்த்தேன்" என்று எழுதியிருக்கிறார் (கலா. 2—11). பேதுரு அவருக்கு மேற்பட்ட தலைவராயிருந்திருந்தால், அவ்வண்ணம் எதிர்த்திருப்பாரா?

மாறுத்தரம்: இதுவே அர்ச். இராயப்பர் மற்ற அப்போஸ்தலரைப் போன்றவரல்ல என்பதற்கு அத்தாட்சி. ஏனெனில் அருளப்பர், யாகப்பர் முதலிய வேறு அப்போஸ்தலர்களை அர்ச். சின்னப்பர் எதிர்த்திருந்தால், அதை விசேஷமாய்க் குறிக்கத்தகுந்ததாய் எண்ணியிருக்கமாட்டார்.

இந்த அர்ச். சின்னப்பரே இந்த கலாத்தியர் நிருபத்திலேயே, தான் மனந்திரும்பிய சமயத்தில் "இராயப்பரைக் கண்டுகொள்ளும்படி நான் ஜெருசலேமுக்குப் போய், அவரோடு பதினைந்து நாளிருந்தேன்" (கலா. 1—18) என்று எழுதியிருக்கிறார். 5-ம் நூற்றாண்டில் ஜீவித்த அர்ச். எரோணிமுஸ் என்பவர் இந்த வசனத்தைப்பற்றி சற்று விகடமாய் எழுதிய விரித்துரையாவது : "சின்னப்பர் இராயப்பரைப் பார்ககப்போனது, அவர் கண்களையும், கன்னங்களையும், முகத்தையும் பார்க்கும்படியல்ல; அவர் இளைத்திருக்கிறரா புஷ்டியாயிருக்கிறரா, அவர் நாசி நேரே அமைக்கப்பட்டிருக்கிறதா வளைந்திருக்கிறதா, அவர் தலை உரோமமுள்ளதா வழுக்கைத்தலையா, என மனுஷ வெளித்தோற்றத்தைப் பார்க்கும் வண்ணமல்ல; **முதன்மையான அப்போஸ்தலருக்கு வணக்கம் செலுத்துவதற்காகவே.**"

அர்ச். இராயப்பர் விசுவாச சத்தியங்களில் தவறவில்லை; புறஜாதியாரோடு முன் புழங்கி வந்தவர் சில யூதரினிமித்தம் அந்தப் புழக்கத்தைவிட்டு விலகினதற்காக, அர்ச். சின்னப்பர் அவரைக் கண்டித்ததாக உரைக்கிறார். கீழ்ப்பட்டவர்கள் மேலுள்ளவர்களை சங்கையோடு ஒருபோதும் கண்டிக்கக்கூடாதா? யாதொரு சமயம் மந்திரி அரசனுக்குப் புத்தி சொல்லக் கூடாதா? அர்ச். பெர்னர்து முதலியோர் அர்ச். பாப்பானவரைத் தலைவராக சங்கித்தபோதிலும், சிற்சில சமயங்களில் அவரைக் கண்டித்து அவருக்கு நல்ல ஆலோசனைகளைச் சொன்னதாக நாம் சரித்திரப் புத்தகங்களில் வாசித்ததில்லையா?

அர்ச். பாப்புமார்களின்பேரில்.

புரோட்.: கிறீஸ்துநாதர் திருச்சபையை ஆண்டு நடத்தும்படி பாப்புமார்களை நியமிக்கவில்லையே. அவர்கள் அதிகாரம் செலுத்த என்ன நியாயமுண்டு?

மாறுத்தரம்: சேசுநாதர் அர்ச். இராயப்பரைத் தமக்கு பதிலாகத் திருச்சபைக்குத் தலைவராக்கினபோது,

அது அர்ச். இராயப்பருடைய மகிமையையும் தனிப் பிரயோஜனத்தையும் எண்ணியல்ல, முழுத் திருச்சபையின் ஒற்றுமையைக் காப்பாற்றும்படியாகவே அவ்விதம் ஏற்பாடு செய்தார். திருச்சபையோ "உலக முடியுமட்டும் எந்நாளும்" (மத். 28-20) நீடித்திருக்கவேண்டியது. ஆகவே, எவ்வளவு காலம் திருச்சபையிருக்குமோ, அவ்வளவு காலம் அதன் அஸ்திவாரக்கல்லுமிருக்கவேண்டும். கிறீஸ்துநாதரின் மந்தைக்கு அர்ச். இராயப்பர் மேய்ப்பனைதால், எவ்வளவு காலம் மந்தையிருக்கிறதோ அவ்வளவு காலம் அதன் மேய்ப்பனும் அவசியம். ஆனல் அர்ச். இராயப்பர் இறந்துபோகவேண்டிய ஓர் மனிதனுகையால், அவர் இறந்த உரோமை நகரில் அவருக்குப்பின் மேய்ப்பர்களாக வருகிறவர்களே அவருக்குக் கிறீஸ்துநாதர் கொடுத்த அதிகாரத்தைத் தொடர்ந்து நடத்திவரவேண்டியவர்கள். அவர்களே பாப்புமார்கள் என்றழைக்கப்படுகிருர்கள்.

புரோட்.: சிலர் பேதுரு அப்போஸ்தலர் உரோமையிலே ஜீவிக்கவில்லை என்கிருர்களே; இதற்கு என்ன மறுமொழி சொல்லுவீர்?

மாறுத்தரம்: அர்ச். இராயப்பர் ரோமாபுரியில் நீரோ என்னும் கொடுங்கோலனுல் 67-ம் வருஷம் சிலுவையில் தலைகீழாய் அறையப்பட்டு வேதசாக்ஷியாக மரித்தார். அவர் இவ்விதம் மரிக்கவில்லையென்பவர்கள், அவர் ரோமாபுரியிலில்லாவிட்டால், வேறு எங்கே, எந்தக்காலத்தில், எவ்விதம் மரித்தார் என்று சொல்லக்கூடுமா? வேறு இடத்தில் மரித்திருந்தால், அவரது எலும்புகள் எந்த ஊரிலிருந்து, எந்த வருஷம் உரோமைக்குக் கொண்டுவரப்பட்டன? அர்ச். இராயப்பர் உரோமையின் முதல் மேற்றிராணியாராயில்லாவிடில், உரோமைக்கு முதல் மேற்றிராணியாராயிருந்தவர் வேறு யார்? அவர் பெயரென்ன? நியாயமான இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாமல் விழிக்கிருர்கள். மேலும் இராயப்பர் சின்னப்பர் அடைபட்டிருந்த சிறைச்சாலை, அவர்கள் கொலையுண்ட இடம், அவர்கள் கல்லறைகள் முதலியவை எக்காலமும் பிரபல்யமா

யிருந்து வந்திருக்கின்றன, பல கோவில்களும் அவ்வித இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன.

அர்ச். இஞ்ஞாசியார் (முதல் நூற்றூண்டு) அர்ச். ஐரனீயஸ் (2-ம் நூற்றூண்டு) அர்ச். சிப்பிரியன் (3-ம் நூற்றூண்டு) முதலிய அநேகர் அர்ச். இராயப்பர் உரோமாபுரியின் முதல் மேற்றிராணியார் என்று தெளிவாய் எழுதியிருக்கிறூர்கள். அர்ச். அகுஸ்தீன், அர்ச். சிங்கராயர், தெர்த்துல்லியன் முதலிய வேதசாஸ்திரிகள் உரோமையிலிருந்த மேற்றிராணிமார்களின் பெயர்களை வரிசையாக எழுதும்போது, அர்ச். இராயப்பர் பெயரைத்தான் தலைப்பில் குறித்திருக்கிறூர்கள். அர்ச். இராயப்பர் காலத்துக்குச் சமீபத்தில் முதல் நூற்றூண்டுகளில் ஜீவித்த இவர்களுக்கு அவரிருந்த இடத்தைப் பற்றித் தெரியுமா, பதினைந்து நூற்றூண்டுகளுக்குப்பின் பிறந்து, எல்லாம் அடியோடு இல்லை என்று ஒரு ஆதாரமுமின்றி குதர்க்கம் பேசுகிறவர்களுக்கு உண்மை தெரியுமா?

அன்றியும் இதற்கு, அர்ச். பாப்புமார்களுக்கு எக்காலமும் கீழ்ப்படிந்து வந்த கணக்கற்ற கத்தோலிக்கரின் சாட்சியம் இருப்பதுமன்றி, பாப்புமார்களால் பிரிவினைக்காரரென்றும் பதிதரென்றும் திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களின் சாட்சியமுமிருக்கின்றது. ஏனெனில், அர்ச். இராயப்பர் உரோமையில் மேற்றிராணியாராயிருந்து அங்கே சாகவில்லையென்று உருசுப்படுவது, பாப்புமார்களுக்கு விரோதமாய் சண்டைபோட தங்களுக்கு அதிக அநுகூலமாயிருந்தபோதிலும், அவ்வளவு துலக்கமான சத்தியத்தை அவர்கள்கூட மறுக்கத் துணியவில்லை. ஆகவே பாப்புமார்களே இராயப்பருடைய ஸ்தானத்தில் திருச்சபைக்குத் தலைவர்களாக ஆண்டுவருபவர்களாவர்.

புரோட்.: கி. பி. நாலாம், ஐந்தாம் நூற்றூண்டுகளுக்குமுன் பாப்புமாரின் ஞான அதிகாரம் துவக்கவில்லை. பாப்புமார் அதிகாரம் பிற்காலத்தில் உண்டாக்கிக்கொண்டதாகும்.

மாறுத்தரம்: நாலாம் ஐந்தாம் நூற்றூண்டிலா கிறீஸ்துநாதர் அர்ச். இராயப்பர் என்னும் கல்லின்மேல்

தமது திருச்சபையைக் கட்டுவதாகச் சொன்னர்? நாலாம் ஐந்தாம் நூற்ருண்டிலா, என் ஆடுகளையும் என் ஆட்டுக் குட்டிகளையும் மேய்ப்பாயாக என்று உரைத்தார்? அர்ச். பாப்புமாரின் அதிகாரம் அர்ச். இராயப்பர் இறந்ததி லிருந்தே திருச்சபையில் அங்கிகரிக்கப்பட்டு வந்திருக் கிறது.

உதாரணமாக, முதல் நூற்ருண்டில் கொரிந்திய கிறீஸ்துவர்களுக்குள்ளே சண்டை சச்சரவு ஏற்பட்ட போது, அவர்களுக்குச் சமீபத்தில் எபேசு நகரத்தில் அப்போஸ்தலராகிய அர்ச். அருளப்பர் இன்னம் உயிரோ டிருந்தபோதிலும், அவரிடம் போகாமல், தூர உரோமை நகரில் அர்ச். இராயப்பருக்குப்பின் மூன்ரும் பாப்பானவரா யிருந்த அர்ச். கிளமென்றுவிடம் விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். அவர் தமது மேலான அதிகாரத்துடன் எல்லாம் திட்டம்செய்து நிருபம் அனுப்ப, அதைச் சங்கை யுடன் ஏற்றுக்கொண்டு, அதுமுதல் சுமார் நூறு வருஷ மளவாக அவருடைய நிருபத்தைத் தங்கள் கோவில்களில் வாசித்துவந்தார்கள். அர்ச். கிளமென்ற் மற்ற மேற்றிராணி மாரைப்போல் ஓர் மேற்றிராணியாரென்று இவர்கள் எண்ணியிருந்தால், அப்போஸ்தலரான அர்ச். அருளப்ப ரிடம் செல்லாமல், இவரிடம் விண்ணப்பம் செய்திருப் பார்களா?

சுமார் 190-ம் வருஷம், உயிர்த்த திருநாள் எந்த நாளில் கொண்டாடவேண்டியது என்று ஆசியாவிலும் ஐரோப்பா விலும் தர்க்கங்கள் நடந்துகொண்டிருக்கையில், முதலாவது விக்டர் (St. Victor I) என்னும் பாப்பானவர் தமது தீர்மானத்தை அறிவிக்கவே, திருச்சபை முழுவதிலும் அது அனுசரிக்கப்பட்டது.

மூன்ரும் நூற்ருண்டில் ஜீவித்த அர்ச். சிப்பிரியான் என்னும் கார்த்தேஜ் பட்டணத்து மேற்றிராணியார், ஞானஸ்நானம் கொடுக்கும் விஷயத்தில் ஓர் தீர்மானம் செய்திருக்க, அதை அர்ச். ஸ்டீபன் என்னும் பாப்பானவர் மாற்றி வேறு தீர்மானம் பிறப்பிக்க, அர்ச். சிப்பிரியானும்

ஆப்பிரிக்காவிலுள்ள மற்றெல்லா மேற்றிராணிமார்களும் அதற்குக் கீழ்ப்படிந்தார்கள். உரோமையிலுள்ள பாப்புமார்களுக்கு எல்லா மேற்றிராணிமார்களின்பேரில் உள்ள மேலான அதிகாரத்தை உணர்ந்ததினாலல்லோ, அவ்விதம் ஏற்றுக்கொண்டார்கள்.

நான்காம் நூற்றுண்டில் நீஸ் (Nice) என்னும் பட்டணத்தில் 318 மேற்றிராணிமார் திருச்சங்கம் கூடியிருக்கையில், பாப்பானவரின் ஸ்தானுபதிகள்தான் அக்கிராசனம் வகித்தார்கள். கால்சிதன், எபேசு என்னும் ஊர்களில் கூடின சங்கங்கள், அர்ச். இராயப்பர் தமது ஸ்தானத்தில் வந்திருப்பவர்களில் ஜீவித்து அவர்கள் மூலமாய் போதித்துத் தீர்மானிக்கிறுரென்று அழுத்தி வெளிப்படுத்தின.

இரண்டாம், மூன்றும் நூற்றுண்டுகளில் திருச்சபையில் ஜீவித்த வேதபாரகர்கள், யார் அர்ச். இராயப்பர் ஸ்தானத்தில் வந்திருப்பவர்களுக்குக் கீழ்ப்படியமாட்டேனென்பார்களோ அவர்கள் மெய்யான விசுவாசிகளல்ல பதிதரே என ஏகோபித்து எழுதியிருக்கின்றுர்கள். முதல் நான்கு நூற்றுண்டுகளிலுள்ள வேதபாரகரில் (Fathers of the Church) ஒருவரேனும், அர்ச். இராயப்பர் ஸ்தானத்தில் பாப்புமார்களன்றி வேறு யாதொரு மேற்றிராணிமாரிருப்பதாகப் போதித்ததாகக் காட்டக்கூடுமோ? முடியாது.

சீர்மையில் மாத்திரமன்று, கீழ்நாடுகளிலும் தங்கள் ஞான அதிகாரிகள்மட்டில் தங்களுக்கு ஏதாவது அதிருப்தியிருந்தபோது விசுவாசிகள் யாரிடம் சென்றுர்கள்? பாப்பானவரிடத்திலேயே. ஆதித்திருச்சபையிலிருந்த வேதபாரகரென்று எல்லோராலும் நன்குமதிக்கப்படுகிறவர்கள் ஏகோபித்து யாரைத் திருச்சபைக்குத் தலைவரென்று வணக்கத்துடன் குறிக்கிறுர்கள்? பாப்பானவரையே. கீழ்த்தேசங்களிலும் மேல்நாடுகளிலும் கூடிய திருச்சங்கங்களை அக்கிராசனுதிபதிகளாய் நடத்தி வந்திருப்பவர்கள் யார்? பாப்புமார்களும் அவர்களுடைய பிரதிநிதிகளுமே (Legates). உலகத்தின் எத்திசையிலுமுள்ள புது ஜாதி ஜனங்களுக்கு வேதம் போதிக்கும்படி குருக்களையும் மேற்றி

ராணிமார்களையும் ஆதிமுதல் எத்தனையோ நூற்றாண்டுகளாய் அனுப்பிவந்தவர்கள் யார்? பாப்புமார்களே. ஏதாவது தப்பறையான போதனைகள் புதிதாய் முளைக்கும்போது அவைகளைக் கண்டிக்கும்படி உலகம் முழுவதிலுமுள்ள கிறீஸ்துவர்கள் ஏறெடுத்துப் பார்ப்பது யாரை? பாப்புமார்களையே.

புரோட்.: பாப்புமாருக்கு இந்த மேலான அதிகாரமில்லை என்று பல நூற்றாண்டுகளில் பலர் தர்க்கித்திருக்கிறார்களே. அவர்களின் சாட்சியத்தையும் கவனிக்கவேண்டியதில்லையா?

மாறுத்தரம்: கடவுளில்லை என்று சொல்லுகிறவர்களுமுண்டு. அவர்கள் சாட்சியத்தினால் கடவுள் இல்லாமலும் தமது அதிகாரத்தைச் செலுத்தாமலும் போய்விடுகிறாரா? தாய் தந்தையருக்கு அதிகாரமில்லை என்று சொல்லுகிற கீழ்ப்படியாத பிள்ளைகளுமுண்டு; அதினால் அவர்களுக்கு அதிகாரமில்லை என்று தீர்மானிக்கத் தகுமா?

நிக்கொலாஸ் என்னும் பாப்பானவர், கிரேக்குப்பிரிவினையை உண்டாக்கின போஷியஸ் (Photius) என்பவனுக்கு விரோதமாய்ப் பேசாதவரையில், அவன் அவருக்குக் கீழ்ப்படிந்துவந்தான். அவனுடைய அக்கிரமச் செயல்களைக் கண்டித்தவுடன் அவருடைய அதிகாரத்தை எதிர்க்கத் தலைப்பட்டான். அவ்வாறே எட்டாம் ஹென்ரி (Henry VIII) என்னும் ஆங்கிலேய அரசனும் பாப்புமாரின் அதிகாரத்தை அங்கிகரித்துக்கொண்டு, லூத்தேருக்கு விரோதமாய் முன்னின்று போர்புரிந்தான்; ஆனால் அவனது மெய்யான மனைவியாகிய கத்தரீனைத் தள்ளிவிட்டு, துர்நடக்கையாய் ஏற்கனவே சேர்த்துவைத்திருந்த ஆன் பொலீன் என்பவளை மணமுடிக்கக் கூடாதென்று, பாப்பானவர் சொன்னவுடன், தன்னையே தன் தேசத்துக்குப் பாப்புவாக்கிக்கொண்டான். லூத்தரும் தன் அபத்தங்களைப் பத்தாம் சிங்கராயர் என்னும் பாப்பானவர் (Leo X) கண்டிக்கும்வரையில் அவருக்கு எவ்வளவோ சங்கையும் கீழ்ப்படிதலும் காண்பித்தான்! ஆகவே, இப்பேர்ப்பட்ட

வர்கள் பாப்புமாரை எதிர்த்ததிலிருந்து பாப்புமார்களுக்கு அதிகாரமில்லை என்று சொல்லலாகாது.

புரோட். : கி. பி. 1378-ம் வருடமுதல் கி. பி. 1415-ம் வருஷ வரையில், அதாவது சுமார் 40-வருஷங்களாக, யார் பாப்பானவர் என்று தெரியவில்லை. ஏககாலத்தில் இருவர் மூன்று பேர் தாங்கள் பாப்பானவர் என்று சொல்லிக் கொண்டார்கள். தொடர்ச்சியாய்ப் பாப்புமார்கள் வந்திருக்கிறார்களென்று நீர் சொல்வதற்கு இது முழுதும் விரோதமாயிருக்கின்றது.

மாறுத்தரம் : இருவர் அல்லது மூவர் தாங்கள் பாப்புமார் என்று ஏகசமயத்தில் சொன்னபோது, ஒருவர் மெய்யான பாப்பானவரும் மற்றவர்கள் பாப்புமாரின் அதிகாரத்தை அபகரித்துக்கொள்ளப் பிரயாசைப்பட்டவர்களுமாவர். இதினால் மெய்யான பாப்புமாரின் வரிசை நாற்பது வருஷகாலமாய் விட்டுப்போயிற்று என்று சொல்வது தவறு. இவ்வண்ணமே இங்கிலாந்து, பிராஞ்சு தேசங்களை மெய்யான அரசர்கள் ஆண்டுவந்தபோது, வேறு சிலர் தாங்கள்தான் அந்த இராஜரீகத்துக்குரியவர்கள் என்று (Pretenders) குழப்பம் பண்ணினார்கள்; அதினால் மெய்யான அரசர்கள் அரசர்களல்ல என்று சொன்னால் பொருந்துமா?

ஆறாவது உர்பன் (Urban VI) என்னும் பாப்பானவர் தெரிந்தெடுக்கப்பட்டபிறகு சில கண்டிப்பான சீர்திருத்தங்களைச் செய்ய அவர் பிரயாசைப்பட்டதால், பிராஞ்சுதேச இராஜாவின் உதவியுடன் ஏழாவது கிளமென்ற் என்ற மற்றொருவரை எதிர்ப்பாப்பானவராக சிலர் நியமித்தார்கள். ஒவ்வொருவர் இறந்தபோது அவரவர்கள் கக்ஷியார் வேறு பாப்புமாரையும், எதிர்ப்பாப்புமாரையும் தெரிந்துகொண்டார்கள். இதெல்லாம் விசனத்துக்குரியதென்றாலும், மெய்யான பாப்பானவர் இவர்களிருவரில் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. **எவர் மெய்யான பாப்பானவர்** என்று சில கத்தோலிக்கருக்குத் தெரியாமற் போனபோதிலும், **மெய்யான பாப்பானவர் இவர்க**

ளுள் ஒருவரிருக்கவேண்டுமென்பதைப்பற்றி ஒரு கத்தோலிக்கருக்கும் ஐயமில்லை. கத்தோலிக்கருக்குள் பாப்புமார் விஷயத்திலிருந்த இந்தக் குழப்பமே, பாப்புமார் திருச்சபைக்கு அவசியம் என்று அவர்கள் எல்லோரும் விசுவசித்தார்களெனத் துலக்கமாய்க் காட்டுகின்றது.

புரோட்.: கி. பி. 855-ம் வூ முதல் 857-ம் வூ வரை ஜோவான் என்னும் ஓர் ஸ்திரீ பாப்புப் பட்டத்துக்கு வரவில்லையா? பெண்களும் பாப்பாக விடலாமா?

மாறுத்தரம்: நீரும் இந்தக் கட்டுக்கதைகளை நம்புகிறதைக் குறித்து மெத்த அதிசயப்படுகிறேன். நாலாம் சிங்கராயர் (Leo IV) என்பவர் 855-ம் வூ ஜுலை மாதம் 17-உ மரிக்க, அதே வருஷம் செப்டம்பர் மாதம் 29-உ மூன்றும் ஆசீர்வாதப்பர் (Benedict III) உடனே பாப்புவானார். அவரைத் தெரிந்தெடுக்க இரண்டு மாத காலம்தான் இடையிலிருந்தது. ஆகவே, ஜோவான் என்னும் பெண் பாப்புவாய் நியமிக்கப்பட்டு இரண்டு வருஷ காலம் ஆளுவதற்கு காலமெங்கே? பாப்புமார் பேரிலுள்ள பகையினால் விரோதிகள் கட்டிவிட்ட கட்டுக்கதைகளில் இது ஒன்று.

பாப்புமாரை ஒரு ஜாதியார் மாத்திரமல்ல உலகிலுள்ள சகல ஜாதி ஜனங்களும் தங்கள் சொந்த ஜாதியாராயில்லாத போதிலும் தங்களுக்கு மேலான அதிகாரியாக ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற தேசங்களிலுள்ள மேற்றிராணி, அதிமேற்றிராணிமார்களும் அவருக்குக் கீழ்ப்படிந்து, தங்களை அவர் அடக்கி நடத்தும்போது அதற்கு அமைந்தொழுகி, தங்கள் சண்டை சச்சரவுகளில் அவருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, ஒரே மந்தையைச் சேர்ந்தவர்களாய் தங்கள் மேய்ப்பனுக்கு 1500 வருஷ காலமாகக் கீழ்ப்படிந்து வந்திருக்கிறார்கள்! லூத்தேர் விரோதித்தெழும்புமுன், ஏறக்குறைய எல்லாக் கிறீஸ்துவர்களாலும் அத்தனை நூற்றாண்டுகளாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்தகைய அதிசயமான அதிகாரம் பொய்யான அதிகாரம் என்றல் தகுமோ, அல்லது "நீ இராயாய் இருக்

கிருய்!. இந்த இராயின்மேல் என் திருச்சபையைக் கட்டு கிறேன். நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ள மாட்டாது" (மத். 16—18) என்று சேசுநாதர் திருவுளம் பற்றிய வாக்கின் உண்மை என்றல் பொருந்துமோ?

தவருத வரம் (Infallibility).

புரோட். : பாப்பானவரும் மனிதர்தானே. அவர் பாவத்தில் தவறி விழமுடியாதென்று புத்தியுள்ள மனிதன் விசுவசிக்கலாமா? சில பாப்புமார்கள் ஒழுங்கீனமாய் நடந்திருப்பதாக நாம் சரித்திர மூலமாய்த் தெளிவாய் அறிந்தில்லையா?

மாறுத்தரம் : பாப்புமார் பாவத்தில் விழமுடியாது (Impeccability) என்று கத்தோலிக்கர் விசுவசிக்கவில்லை. பாப்பானவரும் தாம் பாவி என்றுணர்ந்து நாள்தோறும் திவ்வியபூசை துவக்குமுன் பீடத்தண்டையில் பாவசங்கீர்த்தன மந்திரம் (confiteor) சொல்லி, வாரந்தோறும் தமது குற்றங்குறைகளை மற்றொரு குருவினிடம் பாவசங்கீர்த்தனம் செய்துதான் வருகிருர். ஆனல் அவர் திருச்சபை முழுவதுக்கும் போதிக்கையில், **அபத்தமின்றி வேத சத்தியங்களைப் போதிக்கிறர்** என்பதே "தவருத வரம்" (Infallibility) என்று அழைக்கப்படுகிறது.

புரோட். : இத்தகைய வரம் கடவுள் ஒருவருக்கு மாத்திரமுண்டு; மனிதருக்கு இருக்கமுடியாது.

மாறுத்தரம் : மெத்த சரி. செத்தவனை உயிர்ப்பிக்கிறதும் கடவுள் ஒருவருக்கே உரியது; புதுமைகள் செய்வதும் கடவுள் ஒருவராலேயே கூடும். ஆயினும் இந்த வரங்களைத் தமது போதனை பரம்பும்படி சேசுநாதர் தமது அப்போஸ்தலருக்கும் சீஷர்களுக்கும் அளிக்கவில்லையா? அவ்வண்ணமே தாம் கற்பித்த சத்தியங்கள் நாளடைவில் மாறுபட்டு அபத்தங்களோடு கலக்காமலும், தமது பிரமாணிக்கமுள்ள தாசர் நல்ல மனதுடன் தேடினல், தமது மெய்யான போதகத்தை தடையின்றி அறியவும், சர்வே

சுரன் இந்தத் தவறாவரத்தைத் திருச்சபையின் தலைவருக்குக் கொடுத்திருக்கிறார். இதில் அசாத்தியமான காரியமென்ன?

புரோட்.: அப்படியானால் பாப்பானவர் சொல்லும் வார்த்தையெல்லாம், **சர்வேசுரனால் ஏவப்பட்ட** சுவிசேஷ வாக்குப்போன்றதா?

மாறுத்தரம்: வேதாகமங்களை எழுதினவர்களுக்கு சர்வேசுரனுடைய விசேஷ **ஏவுதல்** (Inspiration) இருந்ததுபோல், அர்ச். பாப்பானவருக்குமுண்டென்று நாங்கள் சொல்வதில்லை. திருச்சபை முழுவதும் விசுவசிக்கும்படி வேத சத்தியங்களைப் போதிக்கும்போது, அவர் திருச்சபை முழுவதையும் அபத்தத்திற்குள்ளாக்காமல் காப்பாற்றும்படி, சர்வேசுரனுடைய ஓர் விசேஷ உதவி (Divine assistance) அவருக்கு உண்டென்றுமாத்திரம் உரைக்கிறோம்.

புரோட்.: இந்த விசேஷ உதவி அவருக்கு எந்த நேரமும் எல்லா விஷயங்களிலுமுண்டா? இதைத் தெளிவாய் விவரியும்.

மாறுத்தரம்: 'தவறாத வரம்' என்னும் **பதத்துக்கு** கத்தோலிக்கர் கொடுக்கும் சரியான பொருள் என்ன என்றும், அந்தத் தவறாத வரம் எந்தச் சந்தர்ப்பங்களில் மாத்திரம் பாப்பானவருக்கு உண்டென்று கத்தோலிக்கர் விசுவசிக்கிறார்களென்றும் அறியாததினால்தான், புரோட்டெஸ்டாண்டார் கத்தோலிக்கர் நினையாத விநோதமான அர்த்தங்களைத் தாங்களாக இந்தப் பதத்துக்குக் கொடுத்துக்கொண்டு, வீண் தர்க்கம் செய்வதும் கத்தோலிக்கரைப் பரிகாசம் பண்ணுவதுமுண்டு. தர்க்கம் தொடுக்கும்போது, எதிரியின் கொள்கையென்ன என்று முதலில் தெளிவாயறிந்து, அது பொய் என்று காண்பிப்பதே கிரமம். தானே ஓர் பொய் அர்த்தம் கொடுத்துக்கொண்டு அது பொய் என்று காண்பிப்பது சாமர்த்தியமா?

கத்தோலிக்கர் **எந்தச் சந்தர்ப்பங்களில்** அர்ச். பாப்பானவர் தமது போதனையில் தவறமுடியாதென்று

விசுவசிக்கிறார்களென்று கூடிய அளவில் தெளிவாய் விளக்குகின்றேன்.

முதலாவது, அவர் போதிக்கும் விஷயம் **விசுவாசத்தையாகிலும், நன்னடக்கையையாகிலும் சார்ந்ததாயிருக்கவேண்டியது.** ஆகவே, கணக்கு, இலக்கணம் முதலிய இவ்வித சம்பந்தமில்லாத இதர விஷயங்களில் அவர் மற்றவர்களைப்போலவே தவறக்கூடும்.

இரண்டாவது, அர்ச். பாப்பானவர் தமது வெறும் அபிப்பிராயமாகவல்ல, **முடிவான தீர்மானமாகப்** போதிப்பதாயிருக்கவேண்டும்.

மூன்றாவது, இதை (ex cathedra) **உலகம் முழுவதிலுமுள்ள சகல கிறிஸ்துவர்களின் மேய்ப்பனும் வேதபாரகருமான மட்டில்** தமது முழு அப்போஸ்தலிக் அதிகாரத்துடன், எல்லோரும் அகத்தியம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கிற கட்டாயத்துடன் போதிக்கின்றதாயிருக்க வேண்டும். ஆகவே, தமது ஊரிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு ஓர் பிரசங்கம் செய்தால், அல்லது யாதொரு வேதசாஸ்திர கலாசாலையில் ஓர் உபாத்தியாயராக ஏதாவது கற்றுக்கொடுத்தால், அல்லது வேதசாஸ்திரங்களைப்பற்றி ஓர் புஸ்தகம் எழுதினல், இதிலெல்லாம் மற்றவர்களைப்போலவே பாப்பானவரும் தமது போதனையில் தவறக்கூடும்.

இங்கே எடுத்துரைத்த காரியங்களே வத்திக்கான் அரண்மனையில் கூடிய திருச்சங்கத்தில் அர்ச். பாப்பானவரின் தவறாத வரத்தைப்பற்றிய தீர்மானத்தில் அடங்கியிருக்கின்றன. ஆகையால், அர்ச். பாப்புமார் ஒருபோதும் பாவம் செய்யமுடியாதென்றாகிலும், அவர்கள் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையும் சர்வேசுரனல் ஏவப்பட்டதென்றாகிலும் கத்தோலிக்கர் விசுவசிப்பதில்லை.

புரோட். : நல்லது, நீர் மேலே விவரித்தபடி பாப்புமாருக்கு தவறாத வரம் உண்டென்று நீர் விசுவசிப்பதற்கு ஆதாரமென்ன ? சுவிசேஷ வாக்கியம் ஏதாவது உண்டா ?

மாறுத்தரம்: திருச்சபைக்கு அர்ச். இராயப்பர் பிரத்தியக்ஷ தலைவராக நியமிக்கப்பட்டாரென்றும், அவருடைய ஸ்தானத்தில் வருகிறவர்கள் பாப்புமார்களென்றும் ஏற்கனவே ருசுப்படுத்தினேன். இத்தகைய பாப்புமார்கள் திருச்சபை முழுவதுக்கும் விசுவாசம், நன்னடக்கைக்குரிய விஷயங்களைப் போதிக்கையில் தவறிப்போகக் கூடுமானால், திருச்சபையை நரகத்தின் வாசல்கள் மேற்கொண்டுவிட்டன (மத். 16-18), கிறீஸ்துநாதர் "இதோ **உலக முடியுமட்டும்** எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேன்" (மத். 28-20) என்ற வாக்கு பொய்யாகிவிட்டதென்று உரைக்கவேண்டியிருக்கும்!

"மீளவும் ஆண்டவர் திருவுளம்பற்றினதாவது: சீமோனே, சீமோனே, இதோ உங்களைக் கோதுமையைப் போல புடைக்கும்படி சாத்தான் கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் தளராதபடி உனக்காக வேண்டிக்கொண்டேன். ஆகையால் நீ ஒருதரம் மனந்திரும்பின பின்பு, **உன் சகோதரரை உறுதிப்படுத்து** என்றார்" (லூக். 22-31, 32). ஏன் சீமோனுக்காக மாத்திரம் கிறீஸ்துநாதர் வேண்டிக்கொள்ளுகிறார்? சீமோனின் தோளின்மேல் திருச்சபையின் பாரம் இருப்பதினாலேயே. கிறீஸ்துநாதர் இராயப்பருக்காகவும் அவர் ஸ்தானத்தில் திருச்சபையின் பாரத்தைக் கொண்டிருக்கவேண்டியவர்களுக்காகவும் செய்த ஜெபம் பலனில்லாமற் போகுமா? இல்லை.

அர்ச். இராயப்பரை நோக்கி, "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக", "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று சேசுநாதர் திருவுளம்பற்றினர். முழு மந்தையாகிய திருச்சபைக்கு மேய்ப்பரான அர்ச். இராயப்பரும் அவர் ஸ்தானத்தில் வரும் பாப்புமாரும் தப்பறையான போதனைகளடங்கிய பாஷாணத்தினாலல்ல, சுகிர்த போதனையாகிய நல்லுணவினாலேயே ஞான மந்தையைப் போஷிப்பிக்கவேண்டும்.

புரோட்.: எனக்குத் தவறாத போதனைகளடங்கிய பைபிள் மாத்திரம் போதும்; தவறாத வரமுள்ள ஆட்கள் அவசியமில்லை.

மாறுத்தரம்: ஓகோ! சற்றுப் பொறும். தவறாத போதனைகளடங்கிய பைபிள் போதுமென்கிறீர். ஆனால் இந்தப் போதனைகளை பைபிளிலிருந்து நீர் அர்த்தம் பண்ணும்போது, உமது அர்த்தம் தவறாத உண்மையுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறீரா? அப்படியானால், அதேபிரகாரம் மற்றவர்களுக்கும் அவரவர்கள் அர்த்தம் தவறாத உண்மையுள்ளதென்று ஒத்துக்கொள்ளவேண்டுமே. ஆகவே, தவறாத வரமுள்ள ஒரு பாப்பானவருக்குப் பதிலாக, எல்லோரையும் தவறாத வரமுள்ளவர்களாக்கிவிடுகிறீர்! இது புத்திசாலித்தனமா? பைபிளுக்கு உமது அர்த்தம்தான் தவறாத உண்மையுள்ளதென்று நீர் எண்ணுவிடில், தவறாத போதனைகளடங்கிய புஸ்தகம் மாத்திரமிருந்து பிரயோஜனமென்ன? அந்த உண்மையான போதனைகளை நேர்மையோடு தேடுகிறவர்கள் அறிவதெப்படி? இதற்கு வழியில்லாமல், சேசுநாதர் நம்மைக் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதுபோல் விட்டுவிட்டாரா? தமது மெய்யான போதனைகளைத் தேடும் தாசருக்கு உண்மையான சத்தியங்களைக் கற்பிக்க வழி யாதொன்றும் செய்ய அவருக்குத் திறமில்லாமல் போய்விட்டதா? மனமில்லாமல் போய்விட்டதா? அல்லது அவர்கள் மெய்யை விசுவசித்தாலும் சரி, பொய்யை விசுவசித்தாலும் சரி என்று கரிசனமின்றி இருக்கின்றாரா? உலக முழுவதும் பரம்பி, இத்தனை வித்தியாசமான ஜாதிஜனங்கள் மத்தியில் ஊடாடி, உலக முடியுமட்டும் நீடித்திருக்கவேண்டிய சத்திய திருச்சபையில் உண்டாகக்கூடிய பல சந்தேகங்களிலும் மோசங்களிலும் சேசுநாதரின் பரிசுத்த போதனை இதுதான் என்று தெளிவாய் தவறாத வரத்துடன் காட்டக்கூடிய ஓர் அதிகாரியை அவர் ஏற்படுத்தியிருப்பது அதிசயமா? அது முற்றும் அவசியமல்லவா? இவ்வித தவறாத வரமில்லாததினால் புரோட்டெஸ்டாண்டு சபைகள் நாளுக்கு நாள் அதிகமதிகமாய்ப் பிரிந்து போதனையில் யாதொரு ஒற்று

மையுமின்றி சீரழிந்திருப்பதே கண்கூடான அத்தாட்சி யல்லவா?

புரோட்.: கலிலேயோ என்னும் வானசாஸ்திரி, பூமி சூரியனைச் சுற்றுகிறது (Copernican System) என்று கற்பித்தபோது, அதைப் பாப்புமார்கள் பொய் என்றார்களே; இவர்களுக்குத் தவறாத வரமுண்டென்று சொல்லலாமா?

மாறுத்தரம்: இதை முதன்முதல் கண்டுபிடித்த கொப்பர்னிக்கஸ் (Copernicus) என்பவரை ரோமாபுரி பாப்புமாரின் சர்வகலாசாலையில் 1500-ம் வருஷம் உபாத்தியாயராக்கி, அவருக்குப் பென்ஷன் (life-pension) கொடுத்தவர் மூன்றாம் பவுல் என்னும் பாப்பானவர். இந்தப் போதனையை (Copernican Theory) முதன்முதல் ஆதரித்துப் பேசின நிக்கோலாஸ் கூசா (Nicholas Cusa) என்பவர் ஐந்தாம் நிக்கோலாஸ் என்னும் பாப்பானவரால் கர்தினாலாக்கப்பட்டார். ஆகவே பாப்புமார்கள் சாஸ்திர அபிவிர்த்தியை எதிர்ப்பவர்களல்ல.

கலிலேயோ என்பவன் சாஸ்திர ருசுக்களோடு நில்லாமல், வேதாகமங்களிலுள்ள வசனங்களுக்குத் தனது அர்த்தங்கள் கொடுத்து, இதற்கு அத்தாட்சியாக்கப் பிரயாசைப் பட்டான். இதினால் வேதசாஸ்திரிகள் தர்க்கிக்கத் துவக்கி, (Roman congregations) என்று சொல்லப்படுகிற பாப்பானவரின் சங்கங்களால் அவன் கண்டித்துத் தண்டிக்கப் பட்டான். ஆனால் இதில் பாப்பானவர் (ex cathedra) முழுத்திருச்சபைக்கும் மேய்ப்பரானமட்டில் போதித்த போதகமில்லை.

PERMISSU SUPERIORUM.

Imprimatur: + AUGUSTINUS, S.J., *Ep. Trichinopolit.*

St. J. I. S. Press, Trichy.—1928.